அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை கடித இல. 03/2004.

எனது இல. தா/7/5/1/4
அரசாங்க நிர்வாக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு – 07.

2004.06.04 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாணசபைகளின் தலைமைச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் மற்றும்
அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளின் தலைவர்கள்,

# டெங்கு கொள்ளை நோயை தடுத்தல்

டெங்கு கொள்ளை நோயை இல்லாதொழிக்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு கட்டமாக வாரத்தின் ஒவ்வொரு வியாழக்கிழமை தினத்திலும் காலை 09.00 மணி முதல் 10.00 மணி வரையிலான காலத்திற்குள் அரச நிறுவனங்களின் அமைவிடங்களையும், அவற்றின் சுற்றுப்புறங்களையும் சுத்தப்படுத்தும் தீவிரமான வேலைத்திட்டமொன்றை செயற்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளன.

02. இங்கு நுளம்புகள் பெருகுகின்ற இடங்களை கண்டுபிடித்து அத்தகைய இடங்களை மிகச்சுத்தமாகவும், ஈரலிப்புத் தன்மை அற்றவையாகவும் வைத்திருப்பதற்கு உரிய ஒழுங்குகளை செய்ய வேண்டும். தனது சுற்றுப்புற சூழலை மிகச் சுத்தமாக பேணி வருவதன் கடும்தேவை பற்றி நிறுவனங்கள் சார்ந்த பணிற்றொகுதிகளுக்கு அறிவுறுத்தவும் வேண்டும்.

03. சுகாதாரம், போஷாக்கு மற்றும் ஊவா வெல்லஸ்ஸ அபிவிருத்தி அமைச்சினால் பொதுசன ஊடகங்கள் மூலம் வெளியிடப்பட்டுள்ளவாறு அந்தந்த அரச நிறுவனங்களின் பணிற்றொகுதிகள், தொழிற்சங்கங்கள், நலன்புரிச் சங்கங்கள் மற்றும் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் இந்நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்த வேண்டும். இதனை வெற்றிகரமாக நடாத்துவதற்காக தகுந்தவாறு தொழிற்பாட்டு குழுக்களையும் அமைக்கலாம்.

04. இச் செயற்பாட்டிற்காக தேவையான மேலதிக ஆலோசனைகள் மற்றும் உதவியை பிரதேசத்தின் சுகாதார அதிகாரிகளிடமிருந்தும், உள்ளூராட்சி நிறுவனங்களிலிருந்தும் பெற்றுக் கொள்வதற்கு தயவு கூர்ந்து நடவடிக்கை எடுக்கவும்.

எஸ். சி. மான்னப்பெரும,
செயலாளர்,
அரசாங்க, நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு.